**உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் - 2015**

-----------------------------------------------------------------------------------------------

உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உள்ளூராட்சி சேவைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 264) 62(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 நிதியத்தின் செயற்பாடு நிலை**

---------------------------------------------------

1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கூறப்பட்ட நிதியத்தின் நிருவாகம் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதிகாரச் சட்டம் திருத்தப்படாமல் 2010

திசெம்பர் 13 ஆந் திகதிய 12/2010 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றுநிரூபத்தின் மூலம் நிதியத்தின் மாதாந்த சம்பளப் பதிவேடு தயாரித்தல் மற்றும் கோவைகளின் பொறுப்புத்தன்மை 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் பிரதேச செயலாளர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்டிருந்தது.

**1.5 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

**2 நிதிக்கூற்றுக்கள்**

**2.1 பாதகமான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01

(i) நியமத்திற்கு முரணாக காசு அடிப்படையின் பிரகாரம் வருமானச் செலவினக் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) நிதியத்திற்குக் கிடைக்கின்ற சகல பெறுவனவுகளும், கொடுப்பனவுகளும் நிதியத்தின் வருமானச் செலவினக் கூற்றின் மூலம் அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், இந்த நிதியத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் பொதுக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்காக பொதுத் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட ரூபா 1,201,716,074 தொகை மற்றும் ஆண்டின் ஓய்வூதியச் செலவினம் ரூபா 1,201,716,074 தொகை கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதியத்தினால் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட, பங்களிப்புப் பணத்தின் பெறுவனவு, வருமானச் செலவினக் கணக்கில் பதிவு செய்யக்கூடாத பிழையான செலவு வைத்தல்களின் கூட்டுத்தொகையுடன் ரூபா 85,094,242 தொகை ஓய்வூதியக் கொடுப்பனவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. ஓய்வூதியக் கொடுப்பனவு குறிப்புக்களின் மூலமேனும் காட்டப்படாமையினால் நிதியத்தின் நலன்களைச் செலுத்துதல் கணக்குகளில் சரியாக பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய நிறுவகப் பங்களிப்புப் பணம் ரூபா 90,813,750 ஆக இருந்த போதிலும், ஆண்டின் போது கிடைத்த ரூபா 85,094,242 தொகை அட்டுறு அடிப்படையில் கவனத்தில் கொள்ளாது வருமானச் செலவினக் கணக்கில்

கணக்கீடு செய்யப்பட்டமையினால் வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 5,721,764 தொகையான மிகை வெளிப்படுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) i. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய பங்களிப்புப் பண மீதி ரூபா 1,488,836,178 ஆக இருந்த போதிலும் பட்டியலிடல் பதிவேட்டின் பிரகாரம் அந்த மீதி ரூபா 1,425,009,276 ஆனமையால் ரூபா 63,826,902 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

ii. திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டியதாகக் குறிப்பிடப்பட்ட பங்களிப்புப் பண மீதிக்கும் பற்றுச்சீட்டு புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட மீதிக்கும் இடையே குறிப்பிட்ட காலமாக வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் எந்த ஒரு வருடத்தின் போதும் அதற்காக சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த வேறுபாடுகள் ஒவ்வொரு ஆண்டுகளிலும் வேறுபட்ட பெறுமதிகளைக் கொண்டிருந்தன. அது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 187,490,163 இனாலும், 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 62,897,485 இனாலும், 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 64,018,765 இனாலும், வேறுபட்டிருந்ததுடன் அதற்குத் தாக்கமளித்த காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓய்வூதிய கணனி தரவு முறைமையின் பிரகாரம் ஓய்வூதியம் வழங்கப்பட்ட உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தில் ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டில் 66,158 ஆகவும், 2014 ஆம் ஆண்டில் 61,634 ஆகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நிதியத்திற்கு 4524 ஓய்வூதியகாரரின் சேர்த்தலொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்தது. 1993 செப்தெம்பர் 03 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற ஓய்வூதியக் காரர்களையும் உள்ளடக்கிய இந்த நிதியத்திற்காக புதிய ஓய்வூதியகாரர்கள் சேர்க்கப்படாதிருந்தமையால் 4524 ஓய்வூதியகாரர்களுக்காக 2015 ஆம் ஆண்டின்போது ஓய்வூதியம் செலுத்தப்பட்டமை தொடர்பான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கும் 331 ஓய்வூதியகாரர்களும், உள்ளூராட்சி சேவைகள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கும் 4,752 ஓய்வூதியகாரர்களும் சேர்க்கப்பட்டிருந்தமை கணனி தரவு முறைமையின் தகவல்களின் படி அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் இந்த நிதியத்தில் 5,083 ஓய்வீதியகாரர்கள் மரணித்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியக் கணக்கில் 25 மாவட்டங்களுக்குரிய சகல உள்ளூராட்சி நிறுவனங்களிலும் மரணித்தவர்கள் தொடர்பான எந்தச் சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிதியத்தின் அங்கத்தவர்களில் மரணித்தவர் விபரங்களைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமையால் மேற்கூறப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடந்த சில வருடங்களில் உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய கொடுப்பனவுகளை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்தபோது 2011 ஆம் ஆண்டில் ரூபா 250,634,865 தொகையான குறைவும், 2012 ஆம் ஆண்டில் ரூபா 147,876,598 தொகையான அதிகரிப்பும், 2013 ஆம் ஆண்டில் ரூபா 41,422,817 இனால் அதிகரிப்பும், 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 5,873,269 அதிகரிப்பும், 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 317,117,795 அதிகரிப்பும் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஓய்வூதியம் வேறுபட்டமைக்கு சர்ச்சைக்குரிய காரணங்கள் தொடர்பாக பகுப்பாய்வு ரீதியில்

கணிப்பீடுகளுடன் விளக்கமளித்தல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த 04 வருடகாலமாக 79 உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 461,959,516 தொகையான நிலுவைப் பங்களிப்புப் பணத்தை அறவிடுவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அது ஒட்டு மொத்த நிலுவைப் பங்களிப்புப் பணத்தில் 31 சதவீதமாகும்.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 19 உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து செலுத்த வேண்டிய மீதி மற்றும் ஒய்வூதிய நிதியத்திற்குக் கிடைக்கவேண்டிய மீதிகளுக்கிடையே ரூபா 173,856,932 தொகையான வேறுபாடடொன்று காணப்பட்டமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு மற்றும் 2011 பெப்ரவரி 24 ஆந் திகதிய 02/2011 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றுநிருபத்தின் 4:3 ஆம் பந்தி | உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணமான ரூபா 1,487,828,844 தொகையான நிலுவை பங்களிப்புத் தொகையை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலுத்துவதற்குள்ள ஏதாவது தொகையிலிருந்து கழித்துக் கொள்வதற்கோ அல்லது அறவிட்டுக் கொள்வதற்கோ போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் 4.1 (அ) பந்தி | மீளாய்வாண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டு அதற்காக விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2012 பெப்ரவரி 08 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றுநிருபம் | மாவட்ட செயலாளர்களினால் அந்தந்த மாதத்தில் மரணித்தவர்கள் தொடர்பான அறிக்கை அடுத்துவரும் மாதத்தின் 25 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதனைப் பெற்றுக் கொள்வதற்கும் நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(ஈ) 2011 திசெம்பர் 15 ஆந் திகிதய 4/2011 ஆம் ஓய்வூதியச் சுற்றறிக்கை — ஓய்வூதிய வகைப்படுத்தலின் பிரகாரம் நிதியத்தின் செலவினம் கணனி முறைமையின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் செலவினங்களைப் பெற்று கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,721,764 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 38,013,664 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற மீளாய்வாண்டின் போது நிதி விளைவுகளில் ரூபா 32,291,900 தொகையான அதிகரிப்பைக் காட்டியது. எவ்வாறாயினும் மேலே 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளின் அடிப்படையில் இந்த நிதி விளைவுகளில் வேறுபாடுகள் ஏற்படலாம்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி சேவையில் ஓய்வூதியத்துடன் உள்ள அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் செலுத்தும் நோக்கத்துடன் இந்த நிதியம் உருவாக்கப்பட்டிருந்த போதிலும் 253 ஆம் செலவினத் தலைப்பின் கீழ் பாதீட்டு நிதி ஏற்பாட்டின் மூலம் நிதியத்தின் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக இந்த நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | - நிதியத்தின் செயற்பாட்டுத் தன்மையை பிரதிபலிக்கும் வகையில் வருமானங்களும் செலவினங்களும் கணக்கீடு செய்யப்படாமை |
| (ஆ) | பங்களிப்புப் பண அறவீடு | - நிலுவைப் பங்களிப்புப் பணத்தையும் மீளாய்வாண்டின் பங்களிப்புப் பணத்தையும் உரிய பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) | அங்கத்தவர் பதிவேடு நாளது வரையாக்குதல் | - பிரதேச செயலக மட்டத்தில் தகவல்களைச் சேகரித்து அங்கத்தவர் எண்ணிக்கையில் மரணித்தல் சீராக்கப்பட்டு நாளது வரையாக்கப்படாமை மற்றும் அதன்படி ஓய்வூதியச் செலவினத்தை உறுதிப்படுத்தாமல் இருந்தது. |